யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 3 ஜ. அவ்வல் 19 இதழ் 32
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16—3—82

# பொலிஸாரின் துன்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி!

## புதிய ஐ.ஜி.பி. 'ருத்ரா உறுதியாக கூறுகிறார்

(கொழும்பு)

**பொதுமக்களைப் பொலிஸார் துன்புறுத்தக்கூடாது. துன்புறுத்தத்தான் வேண்டும் என்று சட்டத்திலும் இடமில்லை. பொதுமக்களைப் பொலிஸார் துன்புறுத்துவது அல்லது தாக்குவது சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு நான் விரைவில் முற்றுப்புள்ளிவைப்பேன்.**

இவ்வாறு புதிய பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதிய பொலிஸ் மா அதிபராக நேற்றுக்காலை திரு. ருத்ரா ராஜசிங்கம் பதவியேற்றதும் செய்தியாளர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது;

### பயங்கரவாதச் செயல்கள்

''வடக்கில் இடம்பெறும் பயங்கரவாதச் செயல்களை விரைவில் ஒழிக்க முடியும் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு.

வடபகுதி பயங்கரவாதச் செயல்களை ஒழித்துக்கட்டுவதில் இராணுவமும் பொலிசாரும் கூட்டுநடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த நடவடிக்கைகள் தொடர்பாக புதிய துப்புகள் எமக்குக்கிடைத்துள்ளன.

### பொலிசார் தாக்குதல்

''பொதுமக்களை பொலிசார் தாக்குவது குறித்து எனக்கு புகார் செய்யப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன்.

### வடக்கில் மூடப்பட்ட பொலிஸ் நிலையம்

''வடக்கில் குறிப்பிட்ட சில பொலிஸ் நிலையங்கள் அண்மையில் மூடப்பட்டன. இவற்றை மீண்டும் திறக்கும் சாத்தியம் இல்லை.

''விக்டர் தென்னக்கோன் தலைமையிலான சம்பள நிர்ணய சபை தெரிவித்த சிபார்சின் மீது பொலிஸாருக்கு விரைவில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.''

## பதவியேற்றார்

(கொழும்பு)

சுதந்திர இலங்கையின் எட்டாவது புதிய பொலிஸ் மாஅதிபராக திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்றுக் காலை பதவியேற்றுக்கொண்டார்.

இலங்கையில் பொலிஸ் மாஅதிபராக தமிழரொருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் திரு. அனுசெனிவிரத்ன பொலிஸ்சேவையில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, அவரின் இடத்திற்கு பொலிஸ் மாஅதிபராக திரு. ருத்ரா ராஜசிங்கம் நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (வெ)

# ரூ. 6,80,000 கொள்ளைமுயற்சி முறியடிப்பு

## 2 இளைஞர்களை பொதுமக்கள் பிடித்தனர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மூன்றாம் கட்டவேலைத்தள தொழிலாளர்களின் சம்பளப்பணமான ஆறு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா ரொக்கப் பணத்தை நேற்று நண்பகல் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப் பட்டுள்ளது. கொள்ளையில் சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களும் பொதுமக்களினால் துரத்திப்பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதுசம்பந்தமாகக் கூறப்படுவதாவது:

ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ம. மரியாம்பிள்ளை, செயலாளர் எஸ். சிவஞானதாஸ் ஆகிய இருவரும் நேற்றுப்பகல் சுமார் ஒருமணியளவில், ஆறு லட்சத்து எண்ணாயிரம் ரூபா பெறுமதியான காசோலையை காங்கேசன்துறை சந்தியிலுள்ள மக்கள் வங்கி கிளையில் ரொக்கப்பணமாக மாற்றிக்கொண்டு காரில் புறப்பட்டனர்.

இவர்கள் இருவரும் சென்றகார் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள ஊறணி என்னுமிடத்தில் பருத்தித்துறை வீதியிலுள்ள ம. மரியாம்பிள்ளையின்வீட்டை அடைந்ததும், தலைவரும் செயலாளரும் வீட்டினுள் நுழைந்தனர்.

[இப்பணம் இன்று செவ்வாய்க்கிழமை சிமெந்து தொழிற்சாலை மூன்றாம்கட்ட வேலைத்தள தொழிலாளர்களுக்கு சம்பளமாக வழங்கப்படவிருந்தது.]

தலைவரும் செயலாளரும் வீட்டுக்குள் நுழைந்த சில நிமிட நேரத்தில், இவர்களைப் பின்தொடர்ந்து வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கி, பிஸ்டல் சகிதமாக வீட்டுக்குள் வந்து பணப் பையைப் பறிக்க முயன்றனராம். அந்த நேரத்தில் இளைஞர்களுக்கும்தலைவர், செயலாளருக்குமிடையில் பெரும் இழுபறி நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் சம்பவத்தைக் கண்டு பயந்த வீட்டில் இருந்த பெண்கள் ஓலமிடவே

(8—ம் பக்கம் பார்க்க)

டெஸ்ட் கிரிக்கெட்

# இலங்கை - 454 பாகிஸ்தான்: 1-47

இஸ்லாமாபாத், மார்ச், 15 இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையே பாகிஸ்தானில்நடைபெற்று வரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் 2ம் நாளான இன்று ஆட்ட நேர முடிவில் இலங்கைக் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 454 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சித்தாத்வெத்தமுனி 157 ஓட்டங்களையும், றோய் டயஸ் 98 ஓட்டங்களையும், ரஞ்சன் மடுகல்ல ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களையும் எடுத்திருந்தது குறிப்பிடத்

(8ம் பக்கம் பார்க்க)

# வெள்ளிக்கிரகத்தின் மேற்பரப்பு தூசிமண்டலம்

மாஸ்கோ, மார்ச் 15

வெள்ளிக்கிரகத்தின் மேற்பரப்பு தூசி மண்டலமாகக் காணப்படுகிறதென சோவியத்யூனியனால் அக் கிரகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இரு விண்வெளிக்கலகங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

சூரியவெப்பம், கதிர்வீச்சு ஆகியவற்றின் காரணமாகவே வெள்ளிக்கிரகம் தூசிமண்டலமாகக் காணப்படுவதாக இரு விண்வெளிக் கலகங்களினாலும் எடுக்கப்பட்ட வர்ணப்படங்களின்மூலம் தெரியவந்துள்ள

(8 பக்கம் பார்க்க)

# "தமிழ்மக்களின் கல்வி வளர்ச்சியில் லயன்ஸ் உறுதுணையாக உள்ளது"

## வட்டு தொழில்நுட்பக் கண்காட்சியில் 'நடா'

(யாழ்ப்பாணம்)

''40 ஆண்டுகள் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நான், அரசியலிலிருந்து சற்று விலகியிருக்க விரும்பினேன். தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்திகருதி மீண்டும் அரசியலில் ஈடுபட்டுள்ளேன்'' என்று யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கைத்தொழில், தொழில்நுட்ப விவசாயக் கண்காட்சியை நேற்றுப் பிற்பகல் குத்துவிளக்கேற்றி திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இக் கண்காட்சியை வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இணைந்து நடத்துகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற ஆரம்பநிகழ்ச்சியில், வட்டு, லயன்ஸ்கழகத் தலைவர் சட்டத்தரணி திரு. கே. குணரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில், ''ஒரு இனம் முன்னேறுவதென்றால், பல துறைகளிலும் அபிவிருத்தியடையவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அரசியல் கண்ணோட்டத்துடன் ஈடுபட்டு அபிவிருத்தியடைவது சிரமம்போல் தெரிகிறது'' என்றார்,

''தந்தை செல்வநாயகம் சொன்னதுபோல் 'தன்கையே தனக்குதவி; தமிழரசே தமிழனுக்கு உதவும்'' என்றும் திரு. நடராசா குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாராட்டிப் பேசுகையில், இக்கல்லூரியை அரசினர் பொறுப்பேற்றபோது கவலைப்பட்டவர்களில் நானும் ஒருவன் இக்கல்லூரி மெச்சக்கூடிய விதத்தில் சிந்தனையாளர்களை— அறிஞர்களை உருவாக்கி நல்ல ஒரு சமுதாயத்தையே படைத்ததற்கு தமிழினம் கடமைப்பட்டுள்ளது'' என்றார்.

''யாழ்ப்பாணத்தில் தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

# கள் அருந்தியவர்கள் மயங்கி விழுந்தனர்!

## ஒருவர் பலி; 9 பேர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கள்ளுத்தவறணையில் கள் அருந்தியவர்கள் திடீரென மயங்கிவிழுந்தனர்.

சுருண்டு விழுந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது ஒருவர் மரணமானார். மற்றுமொருவர் ஆபத்தானநிலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இவர்கள் தவிர எட்டுப்பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்,

நேற்றுப் பகல் சுமார் பதினொரு மணியளவில் ஆவரங்காலிலுள்ள கள்ளுத்தவறணையில் கள் அருந்தியவர்களில் பத்துப்பேர் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

ஆவரங்காலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சீனி என்பவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் மரணமானார். சடையன் இரத்தினம் (42 வயது) ஆபத்தானநிலையில் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இவர்கள் தவிர, நாகன் கணபதி (60 வயது) அருமைத்துரை (38), கந்தையா (42), சண்முகம் (52), சுந்தரம் (42), வீரகத்தி (38), செல்வராஜா (23), ராசதுரை (30) ஆகிய எட்டுப்பேரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி 18—'பி' வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பொன். சுகுணேந்திரன் விசாரணை நடத்திவருகின்றார்.

# அபிவிருத்தித் திட்டங்கள்: புதிய இயக்கம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழ் மக்களின் மத்தியில் அபிவிருத்தித் திட்டங்கள், வேலைவாய்ப்பு, சமூகநீதிகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான முயற்சியில், சமூக குறைபாடுகள் ஒழிப்பு இயக்கம் தீவிரமாக ஈடுபடவுள்ளது.

தென்மராட்சியில் இந்த இயக்கம் திரு. கே. எஸ். தர்மலிங்கம் தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சரசாலை, மீசாலை, வேம்பிராய், நாவற்குழி, கொடிகாமம், போக்கட்டி போன்ற இடங்களில் சமூக குறைபாடுகள் ஒழிப்பு இயக்கத்தின் நோக்கங்கள்பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்றன.

(மா)

### மணிவாக்கு

உப்பென்றும் சீனியென்றும்
உள்நாட்டு சேலையென்றும்
செப்பித்திரிவாரடி — கிளியே
செய்வதறியாரடி.

— மகாகவி பாரதியார்

# நமது நோக்கு

## புதிய பொலிஸ் மா அதிபர்

இலங்கையின் புதிய பொலிஸ் மா அதிபராக திரு. ருத்ரா ராஜசிங்கம் பதவி ஏற்றிருப்பதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். அவரது பணி சாதனைகள் நிறைந்து சிறக்க வாழ்த்துகின்றோம்.

இவ்வாறு அவரை நாம் வரவேற்பதற்கும் வாழ்த்துவதற்கும் இப்பதவியை அலங்கரிக்கும் முதலாவது தமிழ் மகன் அவர் என்பது மாத்திரம் காரணமல்ல. நாட்டில் குற்றச் செயல்கள் முன்னெப்போதையும் வி'- பொதுவாக அதிகரித்திருக்கும் வேளையில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும், பதட்டமும் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமும் அதிகரித்துள்ள இவ்வேளையில் ஒரு தமிழருக்குநாட்டின்பாதுகாப்புக்கு பொறுப்புள்ள ஒரு பதவியைஅலங்கரிக்கும்சந்தர்ப்பம் கிடைத்திருப்பதை எண்ணியே சோதனை மிக்க அவரது பணி வெற்றிபெற வேண்டும் எனவாழ்த்துகின்றோம்.

அரசாங்க சேவையின் பல நிலைகளில் தமிழர்கள் பலர் உயர் பதவிகளை அலங்கரிக்கிறார்கள் என்ற விஷயம் சமீபகாலமாக அடிக்கடி பெரிதாகப் பேசப்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழர்கள் இந்த நாட்டில் இன ரீதியாகப் புறக்கணிக்கப்படவில்லையென்பதை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே அவ்வாறு செய்யப்படுகின்றது,

இந்த நொண்டிப் பிரசாரத்துக்கு மேலும் ஒரு ''ஊன்று கோலாக''ப் பயன்படும் விதத்திலேயே திரு. ருத்ரா ராஜசிங்கத்தின் நியமனமும் இடம் பெற்றிருக்கின்றது என நாம் கருதவில்லை. ஏனெனில் திரு ராஜசிங்கம் இந்த நாட்டின் காவல் துறையில் இன, மத, மொழி பாகுபாடற்ற விதத்தில் பல காலம் அரிய சேவைகள் ஆற்றி திறமையின் காரணமாக உயர்பதவிக்கு வந்தவர். நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது உணர்ச்சிவசப்படக் கூடிய நிலைமைகளிலும் கூட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சீரிய பண்புகளை அவர் வியக்கத்தக்க விதத்தில் சடைப்பிடித்து பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ்காவலர்கள் கட்டு மீறியசெயல்களில் ஈடுபட்ட சமயம் திரு. ருத்ரா ராஜ சிங்கம் தலைமையில் விசாரணைக்காக ஒருகுழு வந்த பொழுது அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பின் தன்மைபற்றியும், சிரேஷ்ட அதிகாரியான அவருக்கு இப்பதவி முன்பே கிடைத்திருக்கவேண்டும் என்பது பற்றியும் பொதுமக்கள் மத்தியில் முன்பு பரவலாக கதைகள் நிலவியதுண்டு. அவை சிறிதும் தம்மனநிலையைப் பாதிக்காதவிதமாக அவர் பணியாற்றிருப்பதும் வியப்புக்குரியது.

காவல்துறையில் பதவி வகிக்கும் அனைவருக்கும் இந்தப் பண்பு மிகமிக அவசியமானதொன்றாகும். அவரை இப்பதவிக்கு நியமிக்க அரசு எடுத்த முடிவுக்கு மேற்சொன்ன பண்புகளே முக்கிய காரணியாக இருந்திருக்கவேண்டும்.

''அரசின் சகலதுறைகளிலும் பயங்கரவாதிகள் நிறைந்துவிட்டார்கள்'' என அமைச்சர் சிறில் மத்தியூ அவர்கள் கூசாமல் கூறி வரும் அவச்சொல்லுக்கு திரு. ருத்ராவின் •சீரிய பண்புகளும் பதவி உயர்வும் ஆப்புவைக்கும் என்று கருதலாம்.

பொலிஸ்துறையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் வலுப்பெறவேண்டும். 'பொலிஸ்' என்றாலே பொதுமக்கள் கிலி கொண்டு ஓடும் நிலைமாறவேண்டும். அற்ப மனம்படைத்தவர்கள் அவ்வப்போது ஆரம்பித்து வைக்கும் இனக்கலவரங்களை அந்தந்த இடத்திலேயே கட்டுப்படுத்தி நாட்டில் எந்தப் பகுதியிலும் எந்தச் சமயத்திலும் எல்லா மக்களும் நிம்மதியுடன் நடமாடவும் பொலிசாரை தம் உற்றதோழர்கள் என்று நம்பி வாழவும் உரிய நடவடிக்கைகளை புதிய பொலிஸ்மா அதிபர் எடுப்பார் என்று நம்புவோம்.

## பொன்விழா காணும் 'தினகரன்'

கொழும்பிலிருந்து 'அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன்' நிறுவனத்தாரால் வெளியிடப்படும் 'தினகரன்' தமிழ் நாளிதழ் தனது பொன்விழா ஆண்டில் பிரவேசித்திருப்பதையொட்டி 'ஈழநாடு' தனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

ஒரு பத்திரிகையின்— அதுவும் தமிழ்ப் பத்திரிகையின் வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் என்பது சாதாரண விஷயமல்ல.

இந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ்மக்களுக்கு இப்பத்திரிகை செய்திருக்கக் கூடிய பணி அளப்பரியது.

செய்திகளை வழங்குவது மாத்திரம் ஒரு பத்திரிகையின் பணி என்பதல்ல; அச்செய்திகளை வழங்கும் முறையில் மக்கள் கருத்தினை உருவாக்குவதென்பது பத்திரிகையாளர்களின் திறமையைப் பொறுத்த விஷயம். இதனைப் பத்திரிகா 'சாகசம்' என்று வர்ணிப்பார்கள்.

அவ்வாறு உருவாகும் மக்கள் கருத்து ஆக்கரீதியாகவும் அமையலாம்; அனர்த்தம் விளைவிப்பதாகவும் இருக்கலாம்.

ஒரு செய்திப் பத்திரிகை எவ்வாறு செயல்பட்டுள்ளதென்பதை அது நீடித்து உயிர் வாழ்வதைக்கொண்டு அறியலாம்.

அந்த வகையில் 'தினகரன்' தனது மக்கள் பணியினைச் சிறப்பாகவே செய்துள்ளது என்பது தெளிவாகின்றது

மேலும் பல்லாண்டுகள் அதன் பணி நீடிக்க வாழ்த்துகின்றோம்.

# முதுமையுறாமல் இருக்கும் வழி!

வயது முதிர்ந்தாலும் இளமையோடு இருக்கும் வழி என்ன என்பதை இக் கட்டுரையில் நகைச்சுவையுடன்விளக்குகிறார் 90 வயதுக்கு மேல் உயிர் வாழ்ந்த உலக தத்துவ மேதையான பேட்ரம் ரஸல் பிரபு. முதியோர் ஆண்டையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது. 'பேனு'

எனது பெற்றோர் இளம் வயதிலேயே இறந்துவிட்டார்கள், என்றாலும் ஏனைய எனது முன்னோர்கள் விஷயத்தில் நான் நன்றாகவே சமாளித்துக் கொண்டுள்ளேன்.

எனது தாய்வழி பாட்டனார் இளமை மலரும் தமது வயதான 67 வயதில் மறைந்தார் எனினும் எனது ஏனைய மூன்று பாட்டன் பாட்டிமாரும் எண்பது வயதுக்குமேலும் வாழ்ந்துள்ளார்கள். எனது தூரத்து முன்னோர்களில் ஒருவர் பற்றி இப்பொழுது நான் ஒரு கண்டுபிடிப்பு செய்துள்ளேன். நீண்டவயது வரை அவர் வாழவில்லை. இப்பொழுது மிக அரிதாகத் தென்படும் ஒரு வியாதியால் அவர் மரணமானார், அதாவது தனது தலையை வெட்டித்துண்டாடச் செய்வதின் மூலம், எனது தாயார் வழி முப்பாட்டி ஒருவர் 90 வயதுவரை வாழ்ந்தார், இறுதி நாள்வரை தமது பின் சந்ததியினருக்கு ஒருபயங்கர வாதியாகவே அவர் இருந்து வந்துள்ளார்,

### தாய் வழி பாட்டியார்

எனது தாய்வழி பாட்டியார் உயிர்வாழும் 9 பிள்ளைகளையும் பால்யத்திலேயே இறந்த ஒரு குழந்தையையும் பெற்றெடுத்தார். பல கருச்சிதைவுகளையும் எதிர்நோக்கினார், பின்னர் விதவையான உடனேயே பெண்களின் உயர் கல்விக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்,

இத்தாலியில் ஒரு மனிதனை சந்தித்ததுபற்றி அவர் அடிக்கடி சொல்லுவதுண்டு, மூத்த வயதான அந்த மனிதர் மிகவும் கவலையோடு காணப்பட்டாராம். விசாரித்த போது தனது இரண்டு பேரப்பிள்ளைகளையும் சமீபத்தில்தான் விட்டுப்பிரிந்து வந்ததாக அவர் கூறினாராம்.

''அட கடவுளே எனக்கு எழுபத்திரண்டு பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள் இவர்கள் ஒவ்வொருவரையும் விட்டுப் பிரியநேரும் ஒவ்வொரு தடவையும் நான் கவலைப்படுவராய் இருந்தால் என் வாழ்க்கையே நரகமாயிருக்கும்'' என்பார் அவர். 'அது இயற்கை' என்றாராம் அந்த மனிதர்'

- பேட்ரம் ரஸல் -

எழுபத்திரண்டு பேரப்பிள்ளைகளில் நானும் ஒருவன்என்ற முறையில் பாட்டியாரின் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

80 வயதின் பின்னர் நித்திரை கொள்வதில் அவருக்கு சற்று சங்கடம் இருந்தது. அதனால் நள்ளிரவிலிருந்து காலை 3 மணிவரை அவர் சமூக விஞ்ஞான நூல்களை வாசிப்பதில் செலவிடுவார். தனக்கு வயதாகிக்கொண்டிருப்பதை கவனிப்பதற்கு அவருக்கு எப்போதாகிலும் நேரம் கிடைத்திருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. இதுதான் இளமையோடு இருப்பதற்கான சரியானவழி என்று நான் நினைக்கிறேன்.

பரவலான ஆர்வமிக்க காரியங்களை ஊக்கத்தோடு ஈடுபட்டுச்செய்துவருவீர்களானால் வெறும் எண்ணிக்கையான வருடங்கள் ஓடுவது பற்றியோ எதிர்காலம் பற்றியோ நினைத்துக்கவலைப்படநேரமிருக்காது.

### உடல் நலம்

உடல் நலத்தைப்பற்றி என்னால் அதிகம் ஒன்றும் சொல்ல முடியாது. ஏனென்றால் நோய்களை பற்றிய அனுபவம் கொஞ்சந்தான். எனக்கு விருப்பமானதைத்தின்கிறேன். குடிக்கிறேன், விழித்திருக்க முடியாத நேரத்தில் உறங்கிப் போகிறேன்.

உடல் நலத்துக்காக உலகத்தில் என்னசெய்ய வேண்டுமோ அதில் ஒன்றையுமே நான் செய்வதில்லை. பொதுவாக நான் எதைச் செய்தாலும் முழுதாகச் செய்ய விரும்புவேன்.

### இரண்டு விஷயங்கள்

முதுமை வயதில் ஒருவர் இரண்டு விஷயங்களில் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், ஒன்று என்னவென்றால் அவசியமில்லாமல்பழையவைகளை போட்டு அலட்டிக்கொள்வது, பழையவைகளை நினைத்துக் கொண்டும், பழைய நல்லநாட்களைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டும் அல்லது இழந்து போன பழைய நண்பர்கள் குறித்து எண்ணிக்கொண்டும் இருப்பது வாழ்க்கையில் நன்மை செய்யாது. எமது சிந்தனையெல்லாம எதிர்காலத்தைப்பற்றியதாய் இருக்க வேண்டும். ஏதாகிலும் காரிய மாற்றுவது பற்றியதாய்இருக்க வேண்டும்.

இது எப்போதும் இலகுவாய் இருப்பதில்லை. சொந்தப் பழைய நினைவுகள் மனப்பாரத்தைக் கூட்டிக்கொண்டே இருக்கும். ஒருவர் தனதுஉணர்வுகள் முன்பு மிக சுறுசுறுப்பாகவும் அறிவு மிகத் தீட்சண்யமாகவும் இருந்தது என்று நினைத்துக்கொள்வது இயல்பு. இது உண்மையானால் அதை மறந்துவிடவேண்டும், மறந்துவிட்டால் அது உண்மையாகவும் இருக்காது.

அடுத்த விஷயம் இளைஞர்களிடமிருந்து அவர்களின் இளமை சக்தியைப்பெற்றுவிடலாம் என்று நினைத்துக் கொண்டு அவர்களின்பின்னால் திரிவதை நிறுத்தவேண்டும்.

உங்கள் பிள்ளைகள் வளர்ந்துவிட்டால் அவர்கள் தமது சொந்த முறையில் வாழவிரும்புவார்கள்.

அவர்கள் சிறியவர்களாய் இருந்ததுபோலவே தொடர்ந்தும் அவர்கள்மீது அக்கறை காட்டினீர்களானால் அது அவர்களுக்கு ஒரு பாரமாக இருக்கலாம்.

### பிள்ளைகள்மீது அக்கறை

பிள்ளைகள்மீது அக்கறை கொள்ளாமலிருக்க வேண்டும் என்றுநான் கூறவில்லை, ஆனால் அது உணர்ச்சி பூர்வமானதாக இருக்கலாகாது.

மிருகங்களில் சிறியவை தம்மைத் தாமே பார்த்துக்கொள்ளும் பராயம் வந்தவுடன் பெரியவை அவைகளைப் புறக்கணித்து விடுகின்றன. ஆனால் மனிதர்களின் பாலிய பராயம் நீண்டுகிடப்பதால் இது சாத்தியமில்லை.

தன்னலமற்ற விஷயங்களில் அக்கறை எடுத்துக்கொண்டு அதற்குப் பொருத்தமான செயல்களில் ஈடுபடும்போது முதுமை வெற்றிகரமாகவும் இலகுவாகவும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த விஷயத்தில்தான் நீண்ட அனுபவங்கள் பயனளிக்கின்றன. இந்த விஷயத்தில்தான் அனுபவத்தின்மூலம் பெற்ற அறிவாற்றலை தடங்கலின்றி பிரயோசனப்படுத்த முடியும்.

வளர்ந்துவிட்ட பிள்ளைகளைப் பார்த்து பிழைவிட வேண்டாம் என்று கூறுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால் முதலில் அவர்கள் உங்களை நம்பமாட்டார்கள். மற்றது பிழைவிடுதல் தான் கல்வியின் மிகமுக்கிய பாகமுமாகும்.

### சொந்த விஷயங்கள்

சொந்த விஷயங்களைத் தவிர்ந்த விஷயங்களில் அக்கறை செலுத்த முடியாத ரகத்தைச் சேர்ந்த மனிதராய் இருப்பின் சொந்தப் பிள்ளைகள் — பேரப்பிள்ளைகள் விஷயத்தில் தலையிடாதுபோனால் ஏதோ வாழ்வே வெறிச்சோடிப் போனதுபோல் தோன்றும். இந்நிலைமையில் அவர்களோடு சேர்ந்துதான் இருக்கவேண்டும், அதன்மூலம் தான் நிம்மதி பெறவேண்டும் என்ற நிலையை விடுத்து அவர்களுக்கு சிறு பண உதவிகளைச் செய்வது, அவர்களுக்காக ஏதாகிலும் தையல் வேலைகளைச் செய்து கொடுப்பது போன்று உதவிகளைப் புரிந்து மகிழ்ச்சியடையலாம்.

### மரணபயம்

சில வயோதிபர்கள் மரணத்தைக்குறித்தே பயந்து கொண்டிருக்கிறார்கள்.

இது இளவயதினரானால் நியாயமான பயம்தான். உதாரணமாக ராணுவத்தில் சேர்ந்

(7ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### தகுதியான மாணவர் இல்லையா?

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைத்துறை கவின்கலை மன்றம் யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 8ம் திகதி நடாத்திய ''நாதவாஹினி'' நிகழ்ச்சியில், கதக்களி நடனம் மட்டுமே இடம் பெற்றது. பரதநாட்டியத்திற்கு, நிகழ்ச்சிநிரலில் 45 நிமிடம் ஒதுக்கியிருந்தும் ஒரு பரதநாட்டியம் கூட இடம் பெறவில்லை. காரணம் என்ன? பரதநாட்டியம் ஆட தகுதியான மாணவர்கள் இல்லையா? அல்லது கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்கள் இல்லையா? ஏன் இந்த நிலை? நாட்டியத்திற்கு தேவையான பக்கவாத்தியம் வயலின், மிருதங்கம், பாட்டு போன்றவற்றை வாசிப்பதற்கும் தகுதியான மாணவர்கள் அல்லது இத்துறைக்கென ஒதுக்கப்பட்ட விரிவுரையாளர்கள் இல்லையா? நுண்கலைத்துறையில் மாணவர்களை சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், வீணை ஆகியதுறைகளில் சேர்க்கப்பட்டு நான்குவருடம் படிக்கிறார்கள். இந்தநிலையில் பட்டம்பெறும் ஒரு இறுதிவருட மாணவிக்கு அல்லது மாணவனுக்குக்கூட ஒரு பரதநாட்டியம்கூட ஆடத்தெரியாது என்றால்; இலங்கையிலேயே பல்கலைக்கழக தமிழ்நுண்கலைத்துறைக்குத் சிறப்பிடமாக விளங்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் நிலை என்ன?

செயலாளர்,
கிருஷ்ணன் கலைமன்றம்.
நீராவியடி.

### விசேட சேவை அலுவலர் நியமன எதிரொலி:

# மன்னார்மாவட்டசபைஐ.தே.க.

## உறுப்பினரை பதவி விலக கோரிக்கை

### யூ. என். பி. ஆதரவாளருக்கும் இடமளிக்கவலியுறுத்து

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற விசேட சேவை அலுவலர்கள் நியமனம் தொடர்பாக மன்னார்மாவட்ட அபிவிருத்திசபையின் ஐ.தே. கட்சி உறுப்பினர்கள் தமது உறுப்பினர் பதவியைத் துறப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் த. வி. கூட்டணி எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசனின் சிபார்சின் பேரில் கடந்த முதலாம் திகதி முதல் 18 விசேட சேவை அலுவலர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இதன் எதிரொலியாக மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சி உறுப்பினர்களும், மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சிப் பிரமுகர்களும் விரக்தியடைந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் விசேட சேவை அலுவலர் நியமனம் ஐ. தே. கட்சியின் சிபார்சில் இல்லாது முழுச்கமுழுக்க த. வி. கூட்டணியின் சிபார்சில் இடம்பெற்றதால் மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையின் ஐ தே கட்சி உறுப்பினர்கள் தமது உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்யவேண்டுமெனவும் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர்களுக்கு மன்னார் மாவட்ட ஐ. தே, கட்சியால் வரவேற்பளிக்கக்கூடாதெனவும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் கலந்து கொள்ளக்கூடாதெனவும் மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சிஆதரவாளர்கள் மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சி பிரமுகர்களைக் கேட்டுள்ளனர்.

கடந்த மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின் போது ஐ. தே. கட்சியையும் த வி. கூட்டணியையும் எதிர்த்துப் போட்டியிட்ட த. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவருக்கு விசேட சேவை அலுவலர் பதவி வழங்கப்பட்டுள்ளது,

தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட த. காங்கிரஸ்கட்சி ஆதரவாளர்களுக்கு விசேட சேவை அலுவலர்களுக்கான நியமனம் வழங்கிய த. வி. கூட்டணி, ஐ. தே. கட்சி ஆதரவாளர் எவருக்கேனும் விசேட சேவை அலுவலர்களுக்கான பதவி நியமனம் வழங்கவில்லை.

மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின் போது ஐ, தே கட்சி உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவளித்தார் என்பதனால் ஏற்கனவே த. வி கூட்டணியின் பட்டியலில் இடம்பெற்றவரின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

இதனால் தற்போது இடம்பெற்ற விசேட சேவை அலுவலர் நியமனம் தொடர்பாக சில த. வி. கூட்டணி ஆதரவாளர்களும் விரக்தியடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 36 விசேட சேவை அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது. தற்போது 18 விசேட சேவை அலுவலர்கள் மட்டுமே த வி.கூட்டணியின் சிபார்சில் நியமனம் பெற்றுள்ளார்கள்.

மிகுதி 18 விசேட சேவை அலுவலர் நியமனங்களையும் ஐ தே. கட்சியின் சிபார்சில் நியமிக்க நடவடிக்கை எடுப்பதோடு மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சி ஆதரவாளர்களிடையே ஏற்பட்டுள்ள விரக்தியையும் நீக்கவேண்டுமென மன்னார் மாவட்ட ஐ தே. கட்சி பிரமுகர்கள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் அமைச்சர்களையும் கேட்டுள்ளனர்.

[க]

## அரசியல் தலைவர்களுக்கு வீட்டுக்காவல்

இஸ்லாமாபாத் மார்ச் 15

பாகிஸ்தானில் நடந்த ஊர்வலமொன்றைத் தொடர்ந்து 10 அரசியல் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 55 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் முன்னாள் கவனர் சுட்டுக்கொல்லப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற ஊர்வலத்தைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஊர்வலத்தில் 200 பேர் கலந்து கொண்டனர்.

முன்னாள் கவர்னர் கொலை தொடர்பாக விசாரணை நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

[க]

## சதி முயற்சியில் ஈடுபட்டவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

லண்டன் மார்ச். 15

சூரினமில் அந்நாட்டின் இராணுவ அரசாங்கத்திற்கு எதிராக சதி முயற்சியை மேற்கொண்ட வில்பிரட் ஹோக்கருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதை ஒல்லாந்து அரசாங்கம் கண்டித்துள்ளது.

சூரினம் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த வியாழக்கிழமை சதிமுயற்சியை மேற்கொண்ட வில்பிரட் ஹோக்கர் நேற்று அதிகாலை இராணுவ அரசாங்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

# தோட்டத்தொழிலாளருக்கு நாம் வழங்கியஉரிமை போதுமானதாகஇல்லை

## இவர்களது பிரச்னைகளுக்கு அரசுமுன்னுரிமைவழங்கும்' - ஜனாதிபதி

(கொழும்பு)

"தோட்டத் தொழிலாளர்களுக்கு நாம் வழங்கிய உரிமை போதுமானதாக இல்லை அவர்களுக்கு இன்னும் கூடுதலான அதிகாரங்களை வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம். ஜனநாயக வழியில் நம்பிக்கை வைத்து நாம் செயல்படவேண்டும். அவ்வழியில் நமது பிரச்னைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம்"

மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நுவரெலியாவில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 27வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

### ஜனநாயக வழிமுறை

"சிலர் ஜனநாயக வழிமுறை வேண்டாமென்று அதற்கு முரணாக செயற்படுகின்றனர் இவ்வாறு அவர்கள் செயற்படுவதற்கு நாம் அனுமதியோம். தோட்டத்தொழிலாளர்கள் எம்போடு சேர்ந்து ஜனநாயக வழிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

".தோட்டத் தொழிற்சங்கங்களான இலங்கை தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் இணைந்து செயல்பட்டு தோட்டத்தொழிலாளர்களின் பிரச்னைகளைத்தீர்க்க முன்வர வேண்டும்.

### நாட்டுவளம் அனைவருக்கும் சொந்தமானது

"இந்த நாட்டின்வளம் சகலருக்கும் சொந்தமானது. சகல மக்களும் இதனை அனுபவிக்க வேண்டும் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் அரசுதோட்டத் தொழிலாளர் பிரச்னைகளுக்கு முன்னுரிமை வழங்கும்", என்றார்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் இங்கு உரையாற்றுகையில் "தோட்டத் தொழிலாளர்களாகிய நாம் எதிலும் ஒதுங்கிக் கொள்ளாமல் எம்மை வலுப்படுத்தவேண்டும். அந்த வலுவின் மூலம் எமது பிரச்னைகளை பேரம்பேசியும் தீர்க்கலாம்" என்றார்.

[இ-வெ]

## புதிய ரடார் கருவி கண்டுபிடிப்பு

புதுடில்லி, மார்ச். 15

பங்களூரிலுள்ள எலக்ரோனிக் நிறுவனம் ஆயுதம் வைத்திருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்கும் பல இலக்குத் திறன் கொண்ட ரடார் கருவியொன்றை கண்டுபிடித்துள்ளது.

இக்கருவியின் மூலம் பீரங்கிகளையும், வேறு ஆயுதங்களையும் கண்டுபிடிக்கமுடியுமென தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் உதவியுடன் இக்கருவி மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும்கூறப்பட்டது. (வெ)

### துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:

## பலியான குடும்பங்களுக்கு ரூ. 10,000 உதவி

சென்னை மார்ச் 15.

கன்னியா குமரி மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்திற்கு தலா 10,000 ரூபா வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இத்தொகை 6 மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்படுமென்றும் தற்போது காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் எவராவது இறந்தால் அவரது குடும்பத்திற்கும் 10,000 ரூபா வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சம்பவம் நடைபெற்ற மண்டைக்காடு பகுதிக்கும் மற்றும் கரையோரப்பகுதிக்கும் நேரில் விஜயம் செய்து சகல மதத்தலைவர்களுடனும் கலந்துரையாடினார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் கடமையாற்றும் சில பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வது பற்றியும் அரசு ஆலோசனை நடத்தவிருக்கிறது.

சம்பவம் நடந்த பகுதிகளில் 145வது தடை உத்தரவு தொடர்ந்து நீடிக்குமெனவும் தடையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பிரான்ஸ் தேர்தல்

பாரிஸ் மார்ச் 15

பிரான்சின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. வலதுசாரி கட்சியினருக்கு ஆதரவு கிடைத்துள்ளது.

வலதுசாரி, மத்திய வலதுசாரி கட்சியினர் 51.5 வீத வாக்குகளைப் பெற்றுள்ளதாவும் இடதுசாரியினர் 47.5 வாக்குகள் பெற்றுள்ளதாகவும் கம்யூட்டர் அறிவித்துள்ளது (க)

## எல்சல்வடோரில் 2 ஆண்டுகளில் 31,000 பேர் படுகொலை

சான்சல்வடோர், மார்ச். 15

எல்சல்வடோரில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை சீர்குலைக்குமுகமாக அங்கு தீவிரவாத இடதுசாரி கெரில்லாக்கள் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அரசாங்க துருப்புக்கள் பலரை கொலைசெய்துள்ளதாக இடதுசாரி கொரில்லாக்களால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை எல்சல்வடோர் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

கொரில்லாக்களின் நிலையங்கள்மீது அரசாங்கப்படைகள் மேற்கொண்ட தாக்குதலின் போது பலர் உயிரிழந்ததாகவும்' காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இருவருடங்களாக எல்சல்வடோரில் நடைபெற்று வரும் உள்நாட்டுயுத்தத்தில் இதுவரை 31,000 க்கு மதிகமானோர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## சபாஷ்வெத்திமுனி

இஸ்லாமபாத் மார்ச் 15

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே பாகிஸ்தானில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கோஷ்டி முதல் நாளன்று தனது முதலாவது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 270 ஓட்டங்களை பெற்றது,

இதில் சிதாத் வெத்தமுனி ஆட்டமிழக்காது 143 ஓட்டங்களையும், ரேய்டயஸ் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களையும் எடுத்தனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் முதன் முதலாக வெளிநாடொன்றில் 100 ஓட்டங்களை எடுத்த இலங்கையர் என்ற பெருமையை சிதாத் வெத்தமுனி பெற்றுள்ளார்.

(வெ)

## பட்டுநூல் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு

சென்னை மார்ச் 15

பட்டுநூல் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு காணவிருக்கிறது. தமிழ்நாட்டுக்கு தேவையான 10 லட்சம் கிலோகிராம் பட்டுநூல் 1986ம் ஆண்டுக்கு முன் கிடைத்துவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக 30 ஏக்கரில் முசுக்கொட்டை வளர்க்கப்படுமென்றும் 4 லட்சம் பேருக்கு பட்டுபூச்சி வளர்ப்பில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க]

## 159 பேர் கைது

சென்னை மார்ச் 15

சேலம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சியதாக 159 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மதுவிலக்கு தடுப்பு பொலிஸார் இவர்களை கைது செய்தனர். (க)

## விமானச்சேவை பொன்விழா

சென்னை மார்ச் 15

பாரத விமானசேவையின் பொன்விழா கோயாம்புத்தூரில் நடைபெற்றது. விமான ஓட்டிகளின் சாதனைகளை பெருந்திரளான மக்கள் கண்டு வியந்தனர். (க)

## பயிற்சி

(வவனியா)

கிராமியக் கைத்தொழில் அமைச்சின் கால்நடைபண்ணை வளர்ப்பு பயிற்சிப் பிரிவினர் வவனியா மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்தும் இருபது இளம் பண்ணையாளர்களைத் தெரிவு செய்து கேகாலையிலுள்ள உந்துகொட கால்நடை பயிற்சிப்பண்ணையில் பயிற்சி அளித்து வருகின்றனர்.

பயிற்சியின் போது உலர் வலய கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, நல்லின புற்தரை அமைத்தல், பால் பதனிடல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## ★ உணவு முத்திரை திருட்டு வழக்கு:

# “எதிரிமீது எனக்கு கோபமில்லை”

## குறுக்கு விசாரணையில் உதவிஅரச அதிபர் சாட்சியம்

-- மாவிட்டபுரம் நிருபர் ஞா. ராமநாதன் --

(மாவிட்டபுரம்)

''உணவுமுத்திரை திருடப்பட்டது தொடர்பாக எனது அலுவலகத்தில் கடமைபுரிந்த எதிரிமீது சந்தேகிப்பதாக நான் பொலிசில் தெரிவித்தேன். எதிரி மது அருந்துவார் மது அருந்தியபடியே கடமைக்கு வருவார். ஆகவே தான் அவரில் சந்தேகம் ஏற்பட்டது. அவருக்கும் எனக்கும் எவ்வித மனஸ்தாபமும் இல்லை.''

இவ்வாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலக உணவு முத்திரை திருட்டு வழக்கில் சாட்சியமளித்த சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் கூறினார்.

மேற்படி அலுவலகத்திலிருந்து 29 உணவு முத்திரைகளை திருடியதாகவும் திருடப்பட்ட 16 உணவு முத்திரைகளை தன்வசம்வைத்திருந்ததாகவும் அலுவலக சிற்றூழியரான எஸ். சவரிமுத்து என்பவர்மீது குற்றஞ்சுமத்தி இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது. வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட போது எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சியமளித்த உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்திவ்வடிவேலை குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: இந்த உணவு முத்திரைகள் உமக்குச் சொந்தமானவையா?

சாட்சி: அரசாங்கத்திற்கு சொந்தமானவை.

கே: உணவு முத்திரை களவு போனதுபற்றி நீர் எப்படி அறிந்தீர்?

சா: எனது அலுவலகத்தில் உள்ள இரும்புப்பெட்டியினுள் முக்கிய தஸ்தாவேஜுக்கள் வைக்கப்படுவது வழக்கம். உணவு முத்திரைகளும் அதற்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. தினமும் மாலையில் இரும்புப்பெட்டியிலுள்ள பொருட்களை பரிசீலனைசெய்வேன். சம்பவதினம் பரிசீலனை செய்தபோது 29 உணவுமுத்திரைகளை காணவில்லை.

கே; திருட்டையடுத்து நீர் என்ன நடவடிக்கைகளை எடுத்தீர்?

சா: முதலில் கச்சேரிக்கு அறிவித்தேன். பின்கச்சேரிக்கு நேரில்சென்று இதுபற்றி தெரிவித்தேன். அவர்கள் பொலிசில் முறைப்பாடுசெய்யுமாறு கூறினர். அதன்படி பொலிசில் முறைப்பாடுசெய்தேன்.

கே: இத்திருட்டுப்பற்றி எதிரியை எப்போவதாவது நீர் விசாரித்தீரா?

சா: ஆம், 15—12—82ல் எதிரியை விசாரித்தேன்.

கே: விசாரித்துவிட்டுஅவரை நீர் தாக்கியதாக கூறுகிறேன்?

சா: இல்லை.

கே: உமது அலுவலகத்திற்கு அருகில் பொலிஸ் நிலையம் இருந்தும் உடன் ஏன் தகவல் கொடுக்கவில்லை?

சா; கச்சேரியுடன்தொடர்பு கொண்டு அவர்கள் கூறுவதன்படி செய்வதே முறையானதால் நான் உடனடியாக பொலிசில் முறைப்பாடுசெய்யவில்லை.

கே: எதிரி களவாடிய முத்திரைகள் கடையொன்றில் இருப்பதாக உமக்கு தகவல் கிடைத்தாக கூறினீர்? அப்படியானால் அத்தகவல் கிடைத்தவுடன் ஏன் பொலிசுக்கு சென்று அதுபற்றித் தெரிவிக்கவில்லை

சா: நா கடையில்போய் பரிசோதனை செய்து முத்திரைகளை மீட்டபின் பொலிசாருக்கு அறிவிக்கலாம் என்றுனைத்தேன்.

கே; கடைக்கு சோதனையிடப்போகும்போது வேறு யார் உம்முடன் வந்தனர்?

சா: 2 கிராமசேவையாளர்கள் வந்தனர்.

கே: கடைக்காரர் முத்திரைகள் தம்மிடம் எப்படி வந்ததாக கூறினர்?

சா: எதிரி இம்முத்திரைகளை தந்துவிட்டு 200 ரூபா பணம்பெற்றதாகத் தெரிவித்தனர்.

கே: அதற்கு கையெழுத்து மூலமான ஏதாவது அத்தாட்சிகள் அவரிடம் இருந்தனவா?

சா: இல்லை.

கே: கடைக்காரர்மீது சந்தேகம் எழவில்லையா?

சா: இல்லை.

கே: மேற்படி கடைக்காரர் ஓர் உத்தரவுபெற்ற வியாபாரி?

சா: ஆம்.

கே; அவரது கடையிலிருந்த உமது அலுவலகத்திலிருந்து காணுமற்போன விண்ணப்பப் பத்திரங்கள் சிலவும் கிழிந்தபடி கிடந்தனவா?

சா: ஆம். அவற்றையும் நான் கைப்பற்றினேன்.

கே: எதிரிக்கும் உமக்கும் மனஸ்தாபம் உண்டு?

சா; அப்படி எதுவும் இல்லை.

கே: அவர் குடிப்பதுபற்றி தெரியுமா?

சா: ஆம், குடிக்கவேண்டாமென்று பலமுறை புத்திமதி சொல்லிவந்துள்ளேன்.

(விசாரணை தொடர்ந்து நடக்கிறது)

---

# குற்றச்சாட்டில்

## திருத்தம் செய்ய உத்தரவு

### விசாரணை மே 10க்கு ஒத்திவைப்பு

(மாவட்டபுரம்)

உணவு முத்திரை திருட்டு வழக்கில் எதிரி மீதான குற்றச் சாட்டில் திருத்தம்செய்ய வேண்டி ஏற்பட்டதால் அதனைச் செய்யுமாறு காங்கேசன் துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

சங்கானை உதவி அரசாங் அதிபர் அலுவலகத்திலிருந்து 2,925 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளை திருடியதாகவும், திருடப்பட்ட முத்திரைகளில் 16 முத்திரைகளை தன்வசம் வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டி மேற்படி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சிற்றூழியராகக் கடமைபுரிந்த எஸ். சவரிமுத்து என்பவர் மீது இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் எதிரிமீதான குற்றச்சாட்டில் திருத்தம்செய்யவேண்டியிருப்பதாக நீதிபதி தெரிவித்தார். எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இதனை ஆட்சேபித்தார். வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்ட முக்கிய சாட்சிகள் சாட்சியமளிக்கப்பட்டபின்னர் குற்றச்சாட்டை மாற்றுவது சரியல்ல என்று அவர் வாதாடினர். அவ்வாறு மாற்றுவதானல் சாட்சிகளையும் மீண்டும் சாட்சியமளிக்க அழைக்கவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் குற்றச்சாட்டில் திருத்தம் செய்யுமாறு காங்கேசன்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டு, விசாரணையை மே மாதம் 10ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## நித்திரை தூக்கத்தில்

# தவறிகடலில் விழுந்தவரை இந்தியமீனவர்காப்பாற்றினர்

[மன்னார்]

இழுவைப்படகில் ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர் நித்திரைத்தூக்கத்தில் கடலில் தவறி விழுந்தார். கடலில் தவறி விழுந்தவரை இந்திய மீனவர்கள் காப்பாற்றி தனுஸ்கோடி கரையில் கரை சேர்த்தனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;

பேசாலையிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பேசாலையைச் சேர்ந்த தி. எட்வேட்குரூஸ் ஜெயசீலன் மிராண்டா ஆகியோர் உட்பட மூன்று மீனவர்கள் இழுவைப் படகில் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர், திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் இரு மீனவர் நித்திரையிலிருக்கும்போது தி. எட்வேட் குரூஸ் என்பவர் இழுவைப் படகினைச் செலுத்திக் கொண்டிருந்தார்;

இழுவைப்படகைச் செலுத்திக்கொண்டிருந்த தி. எட்வேட் நித்திரைத் தூக்கத்தில் கடலில் தவறி விழுந்து விட்டார். அப்போது திடீரென நித்திரையிலிருந்து விழித்தெழுந்த சக மீனவர் இழுவைப் படகைச் செலுத்திக்கொண்டிருந்தவரைக்காணாது திகைத்தார்கள் கடலில தவறிவிழுந்தவர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது அவ்வழியே இயந்திரப்படகில் மீன் பிடிக்க வந்திருந்த இந்திய மீனவர்கள் கடலில் தத்தளித்தவரைக் காப்பாற்றி தனுஸ்கோடியில் கரைசேர்த்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி பேசாலை கிராமசேவை அலுவலர் ஊடாக மன்னார் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

[க]

---

## 50,000 ரூபா பெறுமதியுள்ள

# நங்கூரமிடப்பட்டிருந்த இழுவைகப்பல்கடத்தல்!

### பேசாலை கடலில் சம்பவம்

(மன்னார்)

பேசாலை கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இழுவைப்படகொன்று கடந்த சனிக்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டது.

பேசாலையைச் சேர்ந்த எம். பர்னாந்து என்பவருக்குச் சொந்தமான, பச்சை, சிவப்பு நிறங்களையுடைய 'சமுத்திரா தேவி' என்ற இழுவைப்படகே கடத்திச்செல்லப்பட்டதாகும்.

இச்சம்பவம் பற்றி மன்னார் பொலிசில்புகார்செய்யப்பட்டு, மன்னார்பொலிசார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

(க)

---

## ரூ. 2,50,000 பீடிஇலைகடத்தல்;

# இழுவைப்படகும், பீடிஇலையும் பறிமுதல் கைதான5பேருக்கு 35,000 ரூபா அபராதம்!

(மன்னார்)

இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியுடைய 113 மூடை பீடிஇலைகளைக் கடத்தி வந்தவர்களின் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இழுவைப் படகும், கடத்திவந்த பீடிஇலை மூடைகளும் பறிமுதல் செய்யப்பட்டதோடு 35 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

யாழ். குருநகரைச் சேர்ந்த ஐவர் இந்தியாவிலிருந்து பீடிஇலை மூடைகளைக் கடத்திவந்த போது தலைமன்னார் கடலில் இயந்திரப்படகு பழுதடைந்துவிட்டது.

இழுவைப் படகை திருத்தும் பொருட்டு ஒருவர் கடலில் நீந்தி கரைக்கு வந்தார். அப்போது தலைமன்னார் கடற்கரையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் கடலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இழுவைப் படகின் மீது சந்தேகம்கொண்டு இழுவைப் படகின் அருகில் சென்று பார்த்தபோது, இழுவைப்படகினுள் 113 மூடை பீடிஇலைகள் இருக்கக்கண்டு, இழுவைப் படகில்பயணம்செய்த 5பேரையும் கைதுசெய்து, கைப்பற்றப்பட்ட 113மூடை பீடிஇலைகளையும் மன்னார் சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஐவரும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர்களுக்கு 35ஆயிரம் ரூபா அபராதம் விதித்து இழுவைப்படகும், கடத்திவரப்பட்டபீடிஇலை மூடைகளையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

(க)

---

# “எமது கல்விநிலையங்கள் எமது பெருஞ்சொத்துக்கள்”

(மாவிட்டபுரம்

''எமது கல்வி நிலையங்களை எமது பெருஞ் சொத்துகளாக நாம் கருதவேண்டும். அவற்றின் வளர்ச்சிக்காக சகலரும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும். கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத்துறை போன்ற ஏனைய துறைகளிலும் நமது கல்வி நிலையங்கள் முன்னிலையில் திகழ நாம் வழிவகுக்க வேண்டும்''.

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசிய காங்கேசன்துறை பட்டினசபை முன்னாள் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் தலைமையில் நடந்த இப்போட்டியில் அவர் மேலும் பேசுகையில்: கல்வி நிலையங்களுக்கு அளிக்கப்படும் நிதிகளுக்கு வரியிலிருந்து விதி விலக்களிக்கப்படும் ஒன்று அண்மையில்கூட பிரதமர் கூறியிருக்கிறார். இந்த வரிச்சலுகைத் திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்படும் பட்சத்தில் கல்வி நிலையங்கள் அதிக நிதியுதவிகளைப் பெற முடியும். இவ்வித்தியாலய வளர்ச்சிக்கு நான் என்றும் உதவி புரிவேன்'? என்றார்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ சிவஞானசுந்தரம் பேசுகையில்: ''விளையாட்டுத் துறைக்கு ஆசிரியர் இல்லாத போதும் இவ் வித்தியாலயம் விளையாட்டுத்துறையில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது பாராட்டத்தக்கது விரைவில் இந்தக்குறையை

(5ம் பக்கம் பார்க்க)

---


## உடன் தேவை

வடபிரதேசத்தில் (மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலைப் பகுதிகள் உட்பட) எப்பகுதியிலாவது பயிர்ச்செய்கைக் காணிகள், வீட்டு நிலங்கள், தென்னந்தோட்டங்கள் விற்பனவுக்கும், வீடுகள், கடைகள், கைத்தொழிற்சாலைகள் விற்பனவுக்கோ அன்றி வாடகைக்கோ அன்றிக் குத்தகைக்கோ கொடுப்பதற்கும் இருப்பின் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

திட்ட அதிகாரி:—

தோட்டக் காணிப்பிரிவுப் பகுதி

த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680.

முல்லைத்தீவில் சம்பவம்:

# கோஷ்டி மோதலில் ஒருவர் பலி; சந்தேகநபர் கைது

[வவனியா]

பணக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக 28 வயதுடைய வைரமுத்து கணபதிப்பிள்ளை என்ற விவசாயி அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்!

இச்சம்பவம் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் எனும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்,

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் செல்லையா சிற்றம்பலம் என்பவரை முல்லைத்தீவு பொலிசார் கைது செய்துள்ளனர், மற்றொரு சந்தேகநபரான சுப்பிரமணியம் கார்த்திகேசுவை பொலிசார் தேடுகின்றனர்.

சுப்பிரமணியம் சதாசிவம் என்பவர் பலத்த காயங்களுடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கிராமோதயத் தலைவர்கள்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதியுல் உள்ள வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பகுதிகளின் கிராம சேவையாளர் பிரிவுகளில்நடைபெற்ற தேர்தலின் போது தெரிவுசெய்யப்பட்ட கிராமோதயத் தலைவர்களின் பெயர் விபரம்:

வேலணை கிழக்கு ச.மாணிக்கவாசகர், வேலணை மேற்கு: வா. தவச்செல்வம், புங்குடுதீவு மேற்கு: ஐ.கணேசன், புங்குடுதீவு கிழக்கு: நா.கார்த்திகேசு, புங்குடுதீவு மத்தி; டாக்டர் சி. கணேசு, சரவணை: பண்டிதர் க.இராசையா, மண்டைதீவு. நா.இராசலிங்கம், அல்லைப்பிட்டி; செ.தவவினயம். நயினாதீவு: நா. சிவராசசிங்கம், நயினாதீவு தெற்கு: க. இரத்தினசபாபதி,

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்பிரிவு

எழுவைதீவு பே. மனுவேற்பிள்ளை, நாரந்தனை: அ.போசுருவில் த சிவசம்பு, கரம்பன் பொ.செந்தில்நாதர் ஊர்காவற்றுறைபஜார்; நீ ச.ஜேம்ஸ், காரைநகர் மேற்கு சு.பரஞ்சோதி, காரைநகர் வடக்கு: கா.சோமசுந்தரம், காரைநகர் கிழக்கு: ச. சிவஞானம்.

# காங்கேசன்துறை பிரிவில் விழிப்புக் குழுக்கள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் பிரிவில் விழிப்புக்குழுக்கள் அமைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருட்டுக்களை முறியடித்தல், சந்தேகத்திற்கிடமாக நடமாடுபவர்களை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக கிராமங்கள் தோறும் விழிப்புகுழுக்கள்அமைக்கப்பட்டுவருகின்றன. காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஹெட்டியாராய்ச்சி தமது பிரிவில்விழிப்புக் குழுக்களை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

சங்கானை, பண்டத்தரிப்பு போன்ற பகுதிகளில் விழிப்புக் குழுக்களை ஆரம்பித்துள்ள இவர் மற்றும் பகுதிகளிலும் இவ் விழிப்புக்குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிராமங்களில் இயங்கும் பொதுநல, சமூக சேவா இக்காங்களின் உதவியுடன் அந்தந்தக் கிராமங்களில் விழிப்புக்குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

ஒவ்வொரு விழிப்புக் குழுவிலும் சுமார் 30 பேர் வரையில் இடம்பெறுவார்களென்றும் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுமெனவும் பொலிசாருக்கு உதவியாகவும் திருட்டுக்களை ஒழிப்பதிலும் இக்குழுக்கள் ஈடுபடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது'' ஏற்கனவே விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்ட இடங்களில் அவை சிறப்பாக இயங்குவதாகவும், அவற்ருல் நல்ல பயன் ஏற்பட்டுள்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எமது

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நிவர்த்தி செய்வோம்'' என்ருர்:

அதிபர் திருமதி சச்சிதானந்தம் தமதுரையில்: ''விளையாட்டு மைதானம் இன்றிவிளையாட்டுப்போட்டியை நடத்த முடியாத நிலையிலிருந்த எமக்கு நல்ல மனம் படைத்த பெரியார்கள் முன்வந்து காணியைத் தந்தமையால் இன்று சிறப்பாக விளையாட்டுப்போட்டியை நடத்தமுடிகிறது'' என்ருர்.

திருமதி வி. ஜெயபாலசிங்கம் பரிசில்களை வழங்கினுர்.

ஏப்ரல் 9-ம், 10-ம் திகதிகளில்

# வன்னிமாவட்டத்திற்கு திருமதி சிறிமாவோ விஜயம்!

[மன்னார்]

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு இருநாள் விஜயத்தை மேற்கொள்ள இருக்கின்ருர்.

வன்னி தேர்தல் மாவட்டங்களில், பல இடங்களில் வரவேற்புக் கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடாத்த சுதந்திரக்கட்சியினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏப்ரல் 9ம் திகதி வவனியா, முல்லைத்தீவு, மாவட்டங்களுக்கும், ஏப்ரல் 10ம் திகதி மன்னார் மாவட்டத்திற்கும் விஜயம் செய்வார்.

மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை வரவேற்பதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் ஜனப் எஸ். ஏ. கையும் மேற்கொண்டு வருகிருர். [க]

## நஸீரின் மற்ருெரு சாதனை முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஜனப் பரித் நஸீரின் மற்ருெரு உலக சாதனை முயற்சியான நீண்டநேர சைக்கிள் ஓட்ட சாதனை முயற்சியை, ஏப்ரல் 6ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கவிருக்கின்ருர்,

யாழ்ப்பாணத்திலிருந்து குருநாகல் ஊடாக கொழும்பு சென்று அங்கிருந்து பேருவளை புத்தளம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைவார்.

இச் சாதனை முயற்சியின் போது அவர் வவனியா, புத்தளம், பேருவளை, கொழும்பு ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் தொடர்ந்து நிலையாக ஓடிக்கொண்டிருப்பார். (க)

## கோட்டைமுனை தபால்நிலையம் தரமுயரும்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கோட்டைமுனை உப தபால் அலுவலகம் தபால் அலுவலகமாக தரமுயர்த்தப்படவிருக்கிறது. இப்புதிய அலுவலகத்தை இம்மாதம் 22ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரும், தபால் தந்தி பிரதி அமைச்சருமான ஜனப் எம். ஏ. மஜீத் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்.

கோட்டைமுனை உப தபால் அலுவலகம் தபால் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதை அடுத்து விரைவில் தாண்டவன் வெளியில் உப தபால் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது. [க]

குடும்பத்தை பராமரிக்காத

## 3 பெண் பிள்ளைகளின் தந்தை நஞ்சுக்கு பலி!

(சாவகச்சேரி

குடும்பத்தை சரியானமுறையில் பராமரிக்காத 3 பெண் பிள்ளைகளின் தந்தை சாராயத்துடன் நச்சுத்திராவகத்தை சேர்த்து அருந்தி தற்கொலை செய்துகொண்டார்

கைதடி வடக்கு செல்லத்துரை சுப்பிரமணியத்தின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு என். தர்மேந்திரன் மரணவிசாரனை நடத்தினுர் சு. தேவமனேகரி, இராசப்பா பரமேஸ்வரி, சின்னத்தம்பி செல்லத்துரை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணையின்பின் பின்னர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்றுதீர்ப்புஅளித்தார்.

## கிராம அபிவிருத்தி சங்க சமாஜம் உதயம்

[பண்டத்தரிப்பு]

வலிகாமம் தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாயிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா தலைமையில் நடைபெற்ற சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திருமதி பேர்ளி அத்தனுசியார் [சில்லாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்], உப தலைவர்: எஸ். குமாரசாமி [ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்கம்], செயலாளர்: க. தம்பாபிள்ளை [மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்], உப செயலாளர்: எஸ். செல்வரத்தினம் [பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்சம்] பொருளாளர்; எஸ். சிவகுமாரன் [கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம்], கணக்குப் பரிசோதகர்: திருமதி பொ. சிவானந்தம் [கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி. தென்மேற்கு.]

9 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்ருக்குறைக்குதீர்வு:

# "எமதுசங்கத்திற்கு கிடைத்த பெரும்வெற்றி!''

## வணசிங்கா கூறுகிருர்

(மட்டக்களப்பு]

நாடெங்கும் நிலவும் ஆசிரியர் பற்ருக்குறையை ஆராய்ந்து தீர்வுகாண ஜனுதிபதி பணிப்புரை வழங்கியிருப்பது கைமேல் பலன் கிடைத்துவிட்டதை காட்டுவதாக இலங்கைதமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ்.கே, வணசிங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிப்பதாவது:

இன்று இலங்கையில் என்றுமேயில்லாத ஆசிரியர் பற்ருக்குறை நிலவுகிறது.

இதனுல் கல்வி வளர்ச்சிக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நமது சங்கம் திரட்டிய புள்ளிவிபரப்படி இருபத்தையாயிரம் ஆசிரியர் பற்ருக்குறை உண்டு. அதில் தமிழ் மாணவர்களுக்காக நியமிக்கப்படவேண்டியவர்கள் தொகை 12,500.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தமது உறுப்பினர்கள் நலனிலும் பார்க்க மாணவர்களின் கல்வி நலனில் கூடிய அக்கறை காட்டிவருவது நாடறிந்த விஷயமாகும். ஆசிரியர் பற்ருக்குறை மிகமோசமாக இருப்பதை உணர்ந்த நாம் மற்றைய பிரச்சனைகளைவிட இப்பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தீர்மானித்தோம். கடந்த பல மாதகாலம் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களின் கவனத்திற்கு இப்பிரச்சனையைக் கொண்டு வந்தோம். இம்மாதம் 5ம், 6ம் திகதிகளில் நடைபெற்ற எமது சங்கத்தின் ஏழாவது வருடாந்த மகாநாட்டில் எனது தலைமையுரையில் இதுபற்றி வலியுறுத்தப்பட்டது. இதே மகாநாட்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் சார்பில் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு, எம். பி. சி. சில்வாவிடம் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சமர்ப்பித்த மகஜரில் இது முதலாவது கோரிக்கையாகவிருந்தது. அத்துடன் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இது முக்கிய இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து புதன்கிழமை பாராளுமன்றத்தில் அரசுதரப்பு எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி இருபகுதியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகோபித்த குரலில் வலியுறுத்தியிருப்பதும் ஜனுதிபதி ஆசிரியர் பற்ருக்குறையை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்கான பணிப்புகளை வழங்கியிருப்பதும் எமது சங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும் ஆயினும் மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானத்

[7ம் பக்கம் பார்க்க]

# சிவசக்தி தத்துவத்தை விளங்கவைப்பவர் வித்துவானுக்கு பாராட்டு

(புங்குடுதீவு)

''இதயக்கூட்டில் கிளியாகத் தங்கி ஆடி பேசி பேதித்து நம்மை வளர்த்தெடுப்பவள் மகா சக்தியாகிய சண்டிகா பரமேஸ்வரியே. ஞானசம்பந்தருக்கு ஏழாம் நூற்ருண்டிலே சீர்காழியில் திருமுலைப்பாலை அவள் ஊட்டியதாலேயே சைவத்தமிழ் உலகுக்கு திருப்பமும் திருத்தமும் ஏற்பட்டன. சிவகாமசுந்தரியின் திருமுலைப்பால் உருவாக்கிய சிவத்தமிழ் வாழ்க்கையை நாம்பேணிவளர்த்துக்கொள்ள வேண்டும்''

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவதானத்தில் நடைபெற்ற சண்டிகாஹோம தொடர் சொற்பொழிவுப் பூர்த்திவிழாவில் உரை நிகழ்திய வித்துவான் பொன்.அ.கனகசபைக்கு ''சுகாச்சாரியார்'' என்னும் பட்டத்தினை வழங்கி பேசுகையில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. சி. மாணிக்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது: ''சுகம் என்ருல் கிளி என்று பொருளாகும் அம்பாளின் அநுக்கிரகத்தோடு அவளுடைய அருளாணையை ஏற்று அவர்சொல்லப் பழகியதை சொல்லிப் பழகி கிளிபோன்று சுத்தமாய் சொற்பொழிவு நிகழ்த்தியமையும்; சொற்பொழிவின் கருத்துக்கள் விளக்க விரிவுரையாகி அடியார்களுக்கு சுகத்தைக் கொடுத்ததாலும் வித்துவான் பொன். அ. கனகசபைக்கு ''சுகாச்சாரியார்'' என்னும் பட்டம் பொருத்தமானதே.

''சிவசக்தியை பிம்பத்திலும் கும்பத்திலும் யந்திரத்திலும் எழுந்தருளச்செய்து அடியார்களின் நன்மைக்காக பிரார்த்த பூசை செய்பவர்கள் சிவாச்சாரியார்கள் என அழைக்கப்படுகிருர்கள். சைவ சித்தாந்த தத்துவங்களை படித்து அதன் வழிஒழுகி செந்நெறி காட்ட போதனைசெய்யும் பொன். கனகசபை வித்துவவானில் சுடர்விடும் ஒரு சுகாச்சாரியார்.''

ஆ. நா. கருணனந்தசிவம் பேசுகையில் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் அறிஞர்களை நாம் தேடிப்பிடித்து பாராட்டவேண்டும். அவர்களை ஒதுங்கவிடவும் கூடாது. ஒதுக்கிவிடவும் கூடாது. உண்மையான சைவத்தமிழ் வளர்ச்சியும் வாழ்வும் அவர்களாலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது'' என்ருர்.

ஹரன் யாழ். நகர்
Now Showing
Faye Dunaway, Tommylee Jones
EYES OF LAURAMARS
Horror Action Color
Strictly For Adults

வெஸ்லி
தினசரி: 2.30 6.15 9.15
சிவாஜி — விஜயா
ரிஷிமூலம்

மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களுடன்
5-வது வாரமாகக் காட்சியளிக்கிறது
யாழ். றீகல்
தினசரி10—30, 2—00, 6—30, 9—30 (4 காட்சிகள்)
தனிமரம்
டைரக்ஷன் துரை

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பக்தாத்பேரழகி

லிடோ
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
ஏ. வி. எம். ராஜன் — பானுமதி — சோ
பூவும் பொட்டும்

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 4:30, 7.00, 9.30
Christopher Lee in
Jaguar Lives
(Karate Film)
அடுத்த வெளியீடு
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

2 வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமல ஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2—30, 6—15
இன்றுமட்டும் 9—45
கமல் - ஸ்ரீவித்யா - மேஜர் - ஜெயசுதா
கே. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள் (புதிய பிரதி)

2-வது வெற்றிகரமான மாதம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
தக்கார
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10.30, 2.00, 4.30, 7.00, 9.30
HUNCH BACK OF NOTTRE DAM
பாடசாலைகளுக்கு பிரத்தியேக வசதி செய்துகொடுக்கப்படும். தேவைகளுக்கு மனேஜருடன் தொடர்பு கொள்ளவும்.
விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா
நடித்த
நட்சத்திரம்


## தவக்கால நற்சிந்தனை



நீ எண்ணியிருப்பதைவிட அதிசீக்கிரத்தில் மனிதர் உன்னை மறந்துவிடுவார்கள். ஆதலால் உன் சிநேகிதர் பேரிலும் சுற்றத்தார் பேரிலும் நம்பிக்கை வைக்கதே, உன் இரட்சணியத்தைப்பற்றி பிற்பாடு கவனிக்கலாமென்று தாமதியாதே. பிறர் ஒத்தாசையின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதைவிட, இப்போது முன்ஜாக்கிரதையாக உன் இரட்சணியத்தை வேண்டி நற்கிருத்தியங்களைச் செய்வது உத்தமம். இப்போது உன்மட்டில் உனக்கே கவலையில்லாமற் போனால் பிற்பாடு உன்னைப்பற்றிக் கவலைப்படுகிறவன் யார்? இக்காலமானது மிகவும் விலையேறப் பெற்ற காலம் இப்போது தான் தக்க சமயம் இரட்சணியத்தின் நாட்கள் ஆனால் ஐயோ! மனம்திரும்புவதற்காக உனக்கு ஒருநாள் ஒரு நாழிகை வேண்டுமென்று ஆசிக்கும் காலம் வரும். அந்த நாளும்நேரமும் கிடைக்குமோ நாமறியோம்.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

## வலைபந்தாட்டப் போட்டி

(மண்டைதீவு)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ளவிளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற பெண்கள் வலைபந்தாட்டப்போட்டியில் அல்லைப்பிட்டி கிராம முன்னேற்றச் சங்கப் பெண்கள் வலைபந்தாட்டக் குழுவினர் வெற்றிபெற்று கேடயத்தைப்பெற்றுக்கொண்டனர். இப்போட்டி வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## மன்னாரில் காலரா

(மன்னார்)

மன்னார் பகுதியில் மீண்டும் காலரா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காலரா நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானதையடுத்தே மன்னாரில் மீண்டும் காலரா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது. [க]

## சிறந்த மாணவருக்கு புலமைப்பரிசு

[புங்குடுதீவு]

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் க. பொ. த. [சாதாரணம்] பத்திரப் பரீட்சையில் அதி உயர்ந்த சித்தி தரத்தினைப்பெறும் மாணவர் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'புவனேஸ்வரி புலமைப்பரிசில்' வழங்கப்படவிருக்கிறது.

இவ் வித்தியாலயத்தில் 18 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி துரைசிங்கத்தின் ஞாபகார்த்தமாகவே இப் புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கிறது.

ஆண்டுதோறும் இப்பரிசிலை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கென ஸ்ரீ கணேச மகா வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு. நா. கார்த்திகேசு தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியமணி சி. க. நாகலிங்கம், சட்டத்தரணி வி. ரி. தமிழ்மாறன், ஸ்ரீகணேச மகாவித்தியாலய அதிபர் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

# "இளைஞர் சமுதாயத்துக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு அவசியம்"

(அரியாலை)

"வாழ்க்கையில் நாம் என்ன நிலைமையிலிருந்தாலும் எமக்கு ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக அவசியமாகும். இந்த ஒழுங்கையும், சிறந்த கட்டுப்பாட்டையும் நல்ல வீட்டிலிருந்தும், நல்ல பாடசாலையிலிருந்துமே நாம் பெறமுடியும். நமது நாளாந்த வாழ்க்கையில் இவற்றைப் பேணி வளர்க்கவேண்டும். இவைகளைக் கொண்ட சிறந்த இளைஞர் சமுதாயமே இன்று இந்த நாட்டுக்கு அவசியமாகிறது."

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரிப் பொதுத் தராதர உயர்தர மாணவர் ஒன்றியத்தின் முதலாம் வருட மாணவர்களின் தேநீர்விருந்து ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் பேசுகையில் குறிப்பிட்டார்.

பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் ஸ்ரீகந்தராசா தலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் "உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களில் நாற்பது வீதமானவர்களே சர்வகலாசாலைகளில் அனுமதி பெறுகின்றனர் சர்வகலாசாலையில் அனுமதி பெறுவது மட்டுமே வாழ்க்கையில் இலட்சியமாக அமையாது நாம் எந்த நிலைமையில் இருந்தாலும் தொடர்ந்து கல்வியறிவைப் பெறுவதன் மூலம் நாம் எமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ளலாம். கடுமையான உழைப்பின் மூலமே நாம் நம்மை வளர்த்துக்கொள்ளலாம். நாம் என்ன நிலைமையில் இருந்தாலும் எமது சேவை இந்த நாட்டுக்கு மிகவும் அவசியமாகும் என்பதை மனதிற்கொண்டு வாழவேண்டும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அறிவுக்கு உதவாத நூல்களாலும், திரைப்படங்கள் போன்றவற்றாலும் நாம் அறிவை வளர்த்துக்கொள்ள முடியாது. அவைகளின் மூலம் எமது அறிவை அழித்துக்கொள்ளவே முடியும்" என்றார்.

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் பேசுகையில் "மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் அனுமதிபெற்றுவிட்டதுடன் தமது வாழ்க்கை முடிந்துவிட்டதென்று எண்ணிவிடக்கூடாது. இப்படி எண்ணுவது தவறான, பிழையான முடிவாகும். யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோர்களில் பெரும்பாலானோர் தமது பிள்ளைகள் பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும், சிறந்த கணக்காளர்களாகவும் வர வேண்டுமென்றே விரும்புகின்றனர். எண்ணம் நிறைவேறாவிட்டால் மிகவும் கவலையடைகிறார்கள். என்ன நிலைமை ஏற்பட்டாலும் மாணவர்கள் மனம் தளராது முன்னேற முயற்சி செய்யவேண்டும். இதுபோன்ற உண்டாடல் விழாக்களை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களைப் பிற கல்லூரி மாணவ மாணவிகளைச் சந்திக்கவும், அவர்களுடன் பேசி மகிழவும் தருணத்தைப் பெறுகிறார்கள். அத்துடன் தாமாகவே திட்டமிட்டுச் சேவைசெய்யும் மன இயல்பையும் பெறுகிறார்கள்" என்றார்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 3 ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(16—3—82)

மேடம்: தூரத்து பயணம் யரத்தை தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்திய செலவுகளுக்கும் இடமுண்டு. இன்று சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும் இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

மிதுனம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்துக்கு தடங்கலாக அமைவார்கள் மொட்டைக் கடிதம் ஒன்று அதிக பரபரப்பை ஏற்படுத்தும் தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

கடகம்: இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏர்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவுவார்.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும் வெளியிடத்தில் இருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

கன்னி: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும் தித்திக்கும் செய்தியுடன் தேனு வாழ்வும் உண்டு.

துலாம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்க கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் நன்று.

விருச்சிகம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள் சிறு விடயத்துக்கு கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள் வாதரோகத்துக்கு இடமளியாது அவதானமாய் நடந்து கொள்ளவும்.

தனு: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டில் உள்ளவர்களில் அன்பும் ஆதரவும் தாராளமாக கிடைக்கும இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம் பெறும்.

மகரம்: தூக்கம் விழிகளை தழுவமறுக்கும் கடந்தகால நிகழ்ச்சிகள் அலை மோதும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு.

கும்பம்: தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள். நீண்டகால பயன் அளிக்க கூடிய பொருள் ஒன்று இன்று கிடைக்கலாம்.

மீனம்: நேர்முகப்பரீட்சைக்கு இன்று உகந்த தினம் தெய்வத்தின் அருள் தாராளமாக கிடைக்கும்.

திருமலை க. வேலுப்பிள்ளை
சோதிடக் கலாநிதி

மீன்பிடியாளர்களுக்கு

## திணைக்களம் உதவும்

[கொழும்பு]

புதிய மீன்பிடிப் படகுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ள வறிய மீன்பிடியாளர்களுக்கு கடற்றொழில் திணைக்களம் 1000 மீன்பிடிப் படகுகளை வழங்கவிருக்கிறது. இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடற்றொழில் அமைச்சு செயலாளர் திரு. அனுரா வீரரத்தின, மீன்பிடி படகுகளுடன் பாய்மரம், வலைகள் வினியோகிக்கப்படும் என்றும் ஆனால் இயந்திரம் வழங்கப்படமாட்டாதென்றும் தெரிவித்தார். [க]

# வரி விளம்பரம்

## தேவை

வெளி இடத்தில் வேலை பார்க்கும் அரசாங்க உத்தியோகஸ்தர் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தங்குவதற்கு ஏற்ற அறை வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 2553, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2553

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்குப் பதில் கடமைபுரியும் இரு காவலாளிகள் தேவை. கடமை புரிய விரும்புவோர் 1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு நேர்முகத் தெரிவுக்கு மேற்படி வித்தியாலயத்தில் சமுகமளிக்கவும். ஆ. இராமசாமி, அதிபர். 2549

## விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், பகுதியாகவும் பெற்றுக்கொள்ளலாம். C/o ஸ்ரீலங்கா அச்சகம், 234A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 2555

றெக்கோடிங் பாருக்கு தேவையான பொருட்கள் அம்பிலிபையர் 2, டெக் 2, பொக்ஸ் 2, றெக்கோட் பிலேயர் 2, றெக்கோட்ஸ் 60, பழைய புதிய பாடல்களுடன் கசற் 115, மைக் 2. தொடர்பு கொள்க; 66/6, இந்துமகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2557

## விற்பனைக்கு

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'பஜாஜ்' ஓட்டோ டெலிவரி வான் இல 34/4773 கூடிய விலைகோருபவர்களுக்கு விற்பனைக்குண்டு. இதனை யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் பின் கராஜில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். பரிசீலிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளுக்கு 22.3.82, 23.3.82 ஆகிய இரு தினங்களிலும் இயக்கிக்காட்டலாம். விண்ணப்பங்கள் மேற்படி சங்கத் தலைவரால் 27.3.82 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
நெடுந்தீவு
ப. நோ. கூ. சங்கம்.
2550

## விற்பனைக்கு

இசுசு லொறி 27 ஸ்ரீ 9000 சீறீஸ் டாட்டா 1210 SE, 26 ஸ்ரீ3000 சீறீஸ் இரு லொறிகளும் விற்பனைக்கு உண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். விலை விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். V.M. சண்முகம், No. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2515)

புதிய நிலையில் Honda C 90 ஹொண்டா) Lambretta (லம்பிறட்டா) இத்தாலியன் மொடல் ஸ்கூட்டரும் விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பாலேந்திரா பாலேந்திரா, 95, ஆஸ்பத்திரி வீதி, திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையில் [கொட்டடி] யாழப்பாணம். Tel. 7603 [2442]

கச்சேரியடி காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் 2½ பரப்பு குடியிருப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: சி. தியாகராசா, 37, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (2543)

## வான் விபத்து 6 பேர் பலி

புதுடில்லி. மார்ச். 15

திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்ற வான் ஆந்திராவிலுள்ள கிராமப் பகுதி கால்வாயில் வீழ்ந்ததினுல் 6 பேர் பலியானுர்கள். இந்த வானில் சென்ற மற்றும் இருவர் பலத்த காயமடைந்தனர்.

25 பேரைக்கொண்ட கோஷ்டியினர் திருமண வைபவமொன்றுக்குவானில்சென்றுகொண்டிருந்தபோதே இவ் விபத்து நடந்ததாகக் றுறப்படுகிறது.

வீதியில் சென்ற பாதசாரி ஒருவரை மோதாமல் வான்சாரதி வானை வேறுதிசைக்குத்திருப்ப முயன்றபோது கட்டுப்பாட்டை இழந்ததால் வான், கால்வாய்க்குள் பயங்கரமாக வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

சிறு காயமடைந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (க)

## சோவியத் புத்தகக் கண்காட்சியும் சகாய விற்பனையும்

மக்கள் பிரசுராலய லிமிட்டெட்
யாழ். கிளை ஆதரவில்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில்
15-03-82 தொடக்கம் 20-03-82 வரை
தினமும் காலை 10 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை நடைபெறும்.
பலரகப் புத்தகங்கள் விற்பனைக்குண்டு.
2554

## நிர்வாக இயக்குநர் தேவை
(யாழ். நகர்)

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நானுவித பாவனைப்பொருட்கள் (மின்இயக்கப்பொருட்கள், எவர் சில்வர், வானொலி, ரெலிவிஷன்) வியாபார நிலையத்திற்குத் தகுதிவாய்ந்த இயக்குநர் (மனேஜர்) தேவை.

தகுதி:—இப்படியான வியாபாரங்களில் அனுபவம் அல்லது அரச,கூட்டுத்தாபனங்களில்பொறுப்பவாய்ந்த பதவிகளில் இருந்து ஓய்வுபெற்றவர்கள்—ஆங்கிலம், சிங்களம் மொழித்தகைமைகள் முக்கியம்— தகுந்த சம்பளம் பேசி முடிவாக்கலாம். முழு விபரங்களையும் எழுத்துமூலம் அனுப்பிவைக்கவும்

பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
84/6, மானிப்பாய் வீதி, தபாற்கந்தோர் ஒழுங்கை
யாழ்ப்பாணம். 2556

## மேற்றிராணியார் கோரிக்கை

வார்ஸா, மர்ச் 15

போலந்தில் றேமன் கத்தோலிக்க மேற்றிராணியார் தொழிற்சங்கவாதி திரு. வலேஸாவை விடுதலைசெய்யுமாறு கோரியுள்ளார்.

மேற்றிராணியார் ஒருவர் இப்படியான கோரிக்கை விடுத்துள்ளது இதுவே முதல் தடவையாகும். (க)

## சோவியத் பாதுகாப்பு அமைச்சர் இந்தியா விஜயம்

புதுடில்லி மார்ச். 15

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் டி. எப். உஸ்ரனேக், பாரதத்திற்கு 6 நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று வந்து சேர்ந்தார்.

பாதுகாப்பு அமைச்சருடன் சோவியத் விமானப்படைத் தளபதியும் வந்திருந்தார்.

விமான நிலையத்தில், பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.

சோவியத் பாதுகாப்பு அமைச்சர், பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியையும் பாதுகாப்பு அமைச்சரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார். (க)

## ஆசிரியர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தின் அடிப்படையில் விரைவில் இவ்விஷயம்பற்றி ஜனுதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவோம் தொடர்ந்து இவ் விஷயத்தில் ஆக்கபூர்வமான செயல்பாட்டில் இறங்குவோம். தீர்வுகாணப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் எமக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் மாகநாட்டில் செய்யப்பட்ட முடிவின்படி நேரடி நடவடிக்கையில் இறங்குவோம். இது எங்களது புனிதமான கடமை எனக் கருதுகிறோம். [க

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

கொட்டகப்புலம் வசாவிளான் எஸ்தாக்கிப்பிள்ளை திருச்செல்வம் கைம்பெண் இராசம்மா என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல:ரி/34

சந்தியாப்பிள்ளை வயித்தியாம்பிள்ளை செல்லையா, மகள் அன்னம்மா, கொட்டகப்புலம், வசாவிளான்.
மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனத்தின் வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதற்கிணங்க அதில் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ம் ஆண்டு பங்குனி மாதம் 17 ந் திகதி முற்பல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1982 ம் ஆண்டு பங்குனி மாதம் 12 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்
545

## விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட தீ விபத்து

(கொழும்பு)

இலங்கையின் பிரபல பாடசாலைகளான கல்கிசை பரி. தோமஸ், கொழும்பு றேயல் கல்லூரிகளுக்கிடையே ஆரம்பமான வருடாந்த கிரிக்கெட் போட்டியின்போது, ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சிங்கள விளையாட்டுக்கழக எஸ். எஸ். ஸி.) மைதானத்தின் ஒரு பகுதியில் காய்ந்து சருகாகவிருந்த புற்களில் திடீரெனத் தீப்பற்றியது. இதனையடுத்து தீயணைக்கும் படையினர் தலத்துக்கு விரைந்து மூன்று மணித்தியாலயங்கள் அணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இத் திடீர் தீப்பற்றுதலுக்கு இவ்வளவு காலமும் கடும் வெய்யிலால் கருகியிருந்த புற்கள் மேலும் வெப்பத்தைத் தாங்கமுடியாதிருந்ததே காரணமெனத் தீயணைப்புப்படை அதிகாரி தெரிவித்தார்.

முதல்நாள் பரவிய தீ மேலும் பரவாது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும் மறுநாளும் தீ பரவியது. இதனையடுத்து அன்றும் அணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பார்வையாளர்கள் வீசிய சிகரெட் துண்டுகளிலிருந்து ஏற்பட்ட தீப்பொறிகளே தீப்பிடிப்பதற்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றத்தின் ஏழாம் நாள் இசை விழா இன்று பிரம்மஸ்ரீ ஆர். மூர்த்திஐயர் தலைமையில் நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக வடமாநிலகல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் கலந்து கொள்வார்.

இன்றைய நிகழ்ச்சியில் செல்விகள் ச. குமுதினி ச. சசிகலா க. அநுஷாவின் பாட்டுக்கச்சேரியும், செல்வன்கள் சா. ஜெயபிரகாஸ க. திருநாவுக்கரசு க. பாலகிருஷ்ணன் மிருதங்க இசையும், திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணனந்தசிவத்தின பாட்டுக்கச்சேரியும் அரஸ்கோ நர்த்தனலயம் அளிக்கும் நடன நிகழ்ச்சியும் அண்ணுமலை இசைத்தமிழ் மன்ற மாணவர்களின் வாத்திய விருந்தும் இடம் பெறும்.

## முதுமையுறுமல்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

துவிட்ட ஒரு இளைஞன் யுத்தத்தின்போது தான் இறந்துவிடலாம், அதன்மூலம் வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டிய பலவற்றை இழக்க நேரும் என்று பயம் கொள்வதில் நியாயமுண்டு. ஆனுல் வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அனுபவித்து, தனக்குரிய துறையில் ஏதாகிலும் ஒன்றைச் செய்து முடித்துவிட்டு இருக்கும் நிலையில் மரணபயமானது அர்த்தமற்றது.

இந் நிலைமையிலிருந்து மீள்வதற்கு ஒருசிறிய அளவிலாகுதல் நிம்மதியுறுவதற்கு அக்கறை கொள்ளும் விஷயங்களை படிப்படியாக அதிகரிப்பதோடு தன்னலமற்ற விஷயங்களையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். இது விரிவடையும்போது நான் என்ற தன்முனைப்பு ஒழிந்த விரிந்த உலக வாழ்வினேடு தனிமனித வாழ்வு இணைந்து சங்கமமாகிவிடும்.

தனிமனித வாழ்வானது ஒரு ஆற்றைப்போல இருக்கவேண்டும். ஆரபத்தில் தனித்து சிறிதாக ஓடும் ஆருனது வேகமடைந்து நீர்வீழ்ச்சிகள், பாறைமுகடுகள் முதலியவற்றில் மோதியும் கலந்தும்ஓடி படிப்படியாக அகலமாகியும் ஆழமாகியும் அமைதியாக ஓடத்தொடங்குகிறது. இறுதியில் எதுவித அறிகுறியுமின்றி கடலோடு சங்கமமாகி தனித்தன்மையை இழந்துவிடுகின்றது.

இந்தமுறையில் தன்வாழ்வை நோக்குகிறவன் மரணத்தைப் பற்றிஅச்சமுறமாட்டான்.உடலின் வேகம்குறைந்து ஆய சம் அதிகரிக்கும் காலத்தில் ஓய்வு தேவைபடலாம்.

பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே, என்னல் மேலும் தொடரமுடியாதநிலையில் மற்றவர்கள் தொடர்வார்கள் என்ற எண்ணத்தோடும், முடிந்த அளவு செய்து முடித்துவிட்டோம் என்ற திருப்தியோடும் மரணிப்பதைத்தான் நான் விரும்புகின்றேன்.

(பெ)

## டிராக்டரிலிருந்து விழுந்து மரணம்

(சாவகச்சேரி)

பரந்தனிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நெல், வைக்கோல் ஏற்றிக்கொண்டு டிராக்டரில் வந்து கொண்டிருந்த எம். சுப்பிரமணியம் என்பவர் டிரக்டரிலிருந்து விழுந்து மரணமானுர்.

சாரதி சுப்பிரமணியம் பளையில் மது வருந்திய பின்னர் டிரக்டரைத் தொடர்ந்து செலுத்த முடியாது கஷ்டப்பட அவருடன் வந்த அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை என்பவர் சாரதியை வைக்கலுக்குமேலே ஏற்றிவிட்டு டிராக்டரைச் செலுத்தியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இடைவழியில் அவரைக்காணுது திரும்பிச் சென்று பார்த்த பொழுது எழுது மட்டுவாள் புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தாராம்.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி மரணவிசாரணையை மேற்கொண்டார். சாவகச்சேரி வைத்தியதிகாரி திரு. கே சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினுர். மரண விசாரனை அதிகாரி என். தர்மேந்திரன் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.


## தொலைக்காட்சி

கோலாலம்பூர், மார்ச். 14

மலேசியாவில் தொலைக் காட்சிசேவையை சீர்திருத்தியமைக்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொலைக்காட்சி சேவையில் நிலவிவரும் நிர்வாகச்சீர்கேடுகளையும், ஊழல்களையும் களைவதென்று மலேசியா அரசாங்கம்தெரிவித்துள்ளது (வெ)


யூனியன்
தண்ணீர் இறைக்கும்
இயந்திரம்
மாதிரி எஸ்-பீ 2



நம்பிக்கையானதும் வலுவான இயக்கத்திற்கும். தன்னியக்க பெற்றேல்/மண்ணெண்ணை இயந்திரம்

371, பழைய சோனக தெரு
கொழும்பு 12 தொ 32341 - 4
2536

## இப்படியும் நடக்கிறது

ஐம்பது ஆண்டுகளாக, கூட்டுறவின் பின்னணியில் ஐக்கியமாக ஒளிவிடும் ஒரு யாழ்ப்பாணத்து சஞ்சிகையை கொழும்புக்கு 'இடமாற்றம்' செய்ய முயற்சிகள் நடைபெறுகிறதாம்.

ஆரம்பத்தில் தனித்து நின்ற போதிலும், இடைவெளியில் — மறுசீரமைப்புக்குப் பின்னர், ஒரு கிளையின் துணையுடன் நிமிர்ந்து நின்ற இந்த ஏட்டை, கொழும்பில் அச்சடிப்பதில் மத்தியகுழு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளதாம்.

சஞ்சிகை தலைநகர் சென்ருலும், தொடர்ந்து வருவதில் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் 'இடமாற்றம்' என்ற பெயரில் மூடுவிழா நடந்துவிடுமா என்பதில்தான் பலருக்கும் சந்தேகம்!

'ஊடுருவி'

### இனந்தெரியாதவரின் சடலம்

## அடையாளம் காணுமலே அடக்கம் செய்யப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பிலுள்ள தேவாலயம் ஒன்றில் இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் பிரேத பரிசோதனை முடிந்து 10 நாட்களுக்குப் பிறகு அடையாளம் காணப்படாத நிலையில் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த 6ம் திகதி இச் சடலம் பண்டத்தரிப்பு மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸ் அத்தனுசிரியார் உத்தரவிட்டதற்கிணங்க யாழ். அரசினர் வைத்திய சாலையில்வைத்து பிரேதபரிசோதனை செய்யப்பட்டது. உணவு பற்ருக்குறையினுல் இந்த மரணம் சம்பவித்தது என்று பிரேத பரிசோதனை நடாத்திய யாழ். சட்டவைத்திய அதிகாரி தமது அறிக்கையில் தெரிவித்ததையடுத்து சடலம் தொடர்ந்து அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். அரசினர் வைத்திய சாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. இதுபற்றி வைத்தியசாலை நிர்வாகம் முறையிட்டதை அடுத்து காங்கேசன்துறை பொலிசார் பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் மூலம் சடலத்தை பொறுப்பேற்றனர். அடையாளம் காணப்படாத நிலையில் இச்சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

## புனித பத்திரிசியார் தினம்

திருவிழா திருப்பலி 17ம் திகதி புதன்கிழமை மாலை 4—30 மணிக்கு கல்லூரி ஆலயத்தில் மன்னுர் மறைமாவட்ட ஆயர் அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

2564 அதிபர்


## யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு
## புதிய பஸ்சேவை!

யாழ்ப்பாணத்திலிருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவுக்கு புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

× பஸ் சேவை நேரம்

யாழ்ப்பாணம் காலை 5-00 மணி ➤ முல்லைத்தீவு காலை 8-00 மணி

முல்லைத்தீவு காலை 8-15 மணி ➤ யாழ்ப்பாணம் பகல் 11-15 மணி

பாதுகாப்பான — சௌகரியமான சேவை இது

பிரத்தியேக வாடகைக்கு பஸ்கள் விடப்படும்.

வி. ஆர். வி. ட்ரான்ஸ்போட்,
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8162


## ரூ. 6,80,000....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களது கூக்குரல் வெளியில் பொதுமக்களுக்குக் கேட்கவே நாலா பக்கத்திலிருந்தும் பலர் ஓடிவந்து வீட்டுக்குள் நுழைய இரு இளைஞர்களும் ஓடித்தப்ப முயன்றனர்.

ஒருவர் வெளியில் இருந்த இவர்களது சைக்கிளிலும் மற்றவர் வேறு ஒரு சைக்கிளிலும் பருத்தித்துறைப்பக்கமாக பொதுவீதிவழியாக ஓடினர்.

அந்த நேரத்தில் தலைவரும் செயலாளரும் காரில் ஏறி அவர்களை துரத்திச்செல்ல பொதுமக்களும் துரத்திச் சென்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் இளைஞர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் அ. ஜஸ்டிஸ் என்பவர் சிறுகாயமடைந்தார் என்றும் பிந்திக்கிடைத்த தகவல் தெரிவித்தது.

இளைஞர்கள் இருவரும் சைக்கிளில் வேகமாகச் சென்றபோது, காரும் யின் தொடர்ந்து சைக்கிளை மோதியதும் இளைஞர்கள் சைக்கிள்களை கைவிட்டு ஓடினராம்.

ஒரு இளைஞர் வீடொன்றுக்குள் நுழைந்தபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டார். மற்றவர் வேலியைத் தாண்டியபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டார்.

இவர்களிருவரும் பின்னர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸ் விசாரணைகளைத் தொடர்ந்து ஒரு இளைஞரின் பெயர் சின்னத்துரை அருந்தவராஜா என்றும் இவர் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்தவர் என்றும், மற்றைய இளைஞர் காசிப்பிள்ளை சுரேஷ்குமார் என்றும் இவர் வேலணையைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது.

இளைஞர்கள் இருவரும் பணப்பையுடன் இழுபறிப்பட்டபோது வேறு இருவர் வெளியில் காத்துக்கொண்டிருந்ததாகவும் பின்னர் இவர்கள் மறைந்துவிட்டதாவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ் மக்களின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் கல்விவிவளர்ச்சியில் லயன்ஸ் கழகம் உறுதுணையாக இருந்துவருவது பாராட்டுக்குரியதாகும் என்ருர்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், லயன்ஸ்கழக பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கண்காட்சியைக்காண திரண்டிருந்தனர், (மா)

## கிளியைக் கலைத்த சிறுவன் கிணற்றுக்குப் பலி!

(வேலணை)

மிளாகாய்த் தோட்டத்தில் கிளி கலைக்கச் சென்ற ஒரு சிறுவன் அந்தந் தோட்டத்தின் நடுவில் இருந்த கிணற்றில் தவறி விழுந்து மரணமான பரிதாப சம்பவம் புளியங்கூடல் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

கோவிந்தசாமி அழகரத்தினம் (வயது 13) எனும் சிறுவனே மரணமானவராகும்.

இறந்தவரின் மரணவிசாரணையை வேலணைப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ச. மகாலிங்கம் நடத்திஞர். மரண விசாரணையின் போது தோட்டஉரிமையாளரான திரு. எஸ். வேலுப்பிள்ளை சாட்சியம் அளிக்கையில் சம்பவதின மிளாகாய்த் தோட்டத்தில் கிளிகள் அதிகமாகக்காணப்பட்டதால் அவற்றைக் கலைத்துவிடுமாறு கூறி சிறுவனை தோட்டத்திற்கு அனுப்பியதாகவும் அச்சமயமே தோட்டத்தில் இருந்த கிணற்றில் தவறி விழுந்ததாகவும் கூறிஞர்.

சாட்சிகளைப் பதிவுசெய்து கொண்ட மரணவிசாரனை அதிகாரி, சிறுவனின் பெற்ருேருக்குத் தகவல் கொடுக்குமாறும் இம்மரணம் விபத்துமரணமெனவும் தீர்பளித்தார். சாட்சிசளை சரவனை கிராம சேவையாளர் திரு. சு. குமாரதாஸ் ஆஜார் செய்திருந்தார் ஊர்காவற்றுறைப் பொலிசாரும் சமூகமளித்திருந்தனர். மரண விசாரனை அதிகாரியின் ஐத்தரவின்பேரில் இறந்த சிறுவனின் பெற்ருேருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் சிறுவனின் புதவுடலை மலை நாட்டிற்குக் கொன்று சென்றனர்.

## தேசிய மறை நூலாக திருக்குறள்

புதுடில்லி, மார்ச் 15

திருவள்ளுவரினுல் இயற்றப்பட்ட திருக்குறளை தேசிய மறைநூலாக அங்கீகரிக்க வேண்டுமென்று இந்திய மத்திய அரசை அ. தி. மு. க. உறுப்பினர் திரு. என். சௌந்தரராஜன் கேட்டுள்ளார். [வெ)

## டெஸ்ட் கிரிக்கட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கது.

பாகிஸ்தான் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் ஒரு விக்கட் இழப்பிற்கு 47 ஓட்டங்களை எடுத்திருந்தது. (வெ)

## வெள்ளிக்கிர..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக கூறப்பட்டது.

இக் கிரகம் தொடர்பாக இவ் விண்வெளிக்கலசங்கள் மேலும் பல வர்ணப்படங்களை விபரங்களுடன் அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## மரண அறிவித்தல்

### சட்டத்தரணி பொ. கணபதிப்பிள்ளை

உடுப்பிட்டியைச் சேர்ந்த சமாதான நீதவானும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான பொ. கணபதிப்பிள்ளை காலமானுர். இவர் மரகதவல்லியின் அருமைக் கணவரும், மகாதேவா (ஹேலீஸ்), கமலா (ஸாம்பியா — முன்னைநாள் சென் பிறிஜெட் கல்லூரி ஆசிரியை), சரோஜினி (சட்டத்தரணி), மகேந்திரன் (பூராஹாதி), கௌரி (மெதடிஸ் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் தகப்பனுரும், மாணிக்கவாசகர் (ஸாம்பியா, முன்னைநாள் கணக்காளர், தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்), திருவேணி (ஹேலீஸ்) ஆகியோரின் மாமனுரும் சஞ்சு, பிரதீவ், ஷாலினி ஆகியோரின் பாட்டனுருமாவார். அன்னரது ஈமக்கிரிகைகள் நாளை 17ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உடுப்பிட்டியில் நடைபெறும்.

2552

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை யோககுரு



வல்வெட்டித்துறை, காலஞ்சென்ற தண்டயல் செல்லத்துரை தம்பதிகளின் புதல்வனும், பிரபல வர்த்தகருமான யோககுரு வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னரின் மரணச் சடங்குகள் நாளை புதன்கிழமை 17—3—82 மாலை ஐந்து மணியளவில் ஊறணி மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

— செல்லத்துரை குடும்பத்தினர்

2563

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 16-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.